ௐ

# க்ஷத்திரிய (பொந்தில்) திருமண சடங்கு பற்றிய தொகுப்பு



கோவிந்த் ரத்தன்

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நிச்சய தாம்பூலம் | 3 |
| 2. | மணமகன் / மணமகள் வீட்டில் விநாயகர்/ குலப்பூஜை | 4 |
| 3. | டீகா | 5 |
| 4. | கம்பஸ்தான் | 6 |
| 5. | பராத் | 10 |
| 6. | பௌரி | 12 |



**திரு. பா. கோவிந்த் சிங்**
**(1916 – 1992)**

## முன்னுரை

நமது சமூகத்தவர்கள் சடங்குகள் சமபந்தமாய் பலர் அறிய ஆவல் கொண்டு நமது சங்கத்தின் காப்பளாராக இருந்த மறைந்த பெரியவர் திரு. பா. கோவிந்த் சிங் அவர்கள் பல முயற்சிகள் எடுத்ததின் பயனாக, அவரின் முயற்சியினைத் தொடர்ந்து அவர் ஆவல் பூர்த்தி செய்ய அவர் ஆசிர்வாதத்துடன் இந்த வகையில் முதல் நூலாக அவருக்குக் 1994 பொந்தில் சித்திரை இதழில் காணிக்கை ஆக்கியிருந்தோம், அதன் மறுமதிப்பை வெளியிடுகிறோம்.

ௐ

# க்ஷத்திரிய (பொந்தில்)

# திருமண சடங்கு பற்றிய தொகுப்பு

க்ஷத்திரியரிர்கள் யாவரும் விஷ்ணு அம்சமுடையவர்கள், ஆதலால் குரு உபதேசம் பத்திரரிசலம் / துவாரக / திருப்பதி போன்ற ஏதேனும் ஒரு விஷ்ணு ஸ்தலத்தில் உபதேசம் பெற வேண்டியது.

நம் சமூகத்தவர்கள் தங்கள் வீட்டு திருமண வைபவங்கள் இடத்திற்கு இடம் மாறுபட்டு செய்து வருகிறார்கள். இது சரியா அல்லது தவறா என்பதில் பலருக்கு சந்தேகங்கள் எழுவது நியாயமே. காரணம், நாம் ஒரே இடத்தில் இல்லாமல் பரவலாக இருப்பதால் அதன் முறைகள் பலருக்கு சரிவர தெரியாதது தான். பலர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பொதுவாக பலர் நடத்தும் சடங்குகளை, நடைமுறையில் பின்பற்றுவதை இங்கு தொகுத்து வெளியிடுகிறோம். இதில் மாற்றங்கள் இருந்தால் தயவு கூர்ந்து ஆதாரத்துடன் தெரிவித்தால் அவைகளை தொகுத்து வரும் வெளியீட்டில் வெளியிட, தங்கள் மேலான அறிவுரைகளை உளமாற வரவேற்கின்றோம். குற்றம் குறைகள் இருப்பின் அதனை பொறுத்து எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால் மிக்க நன்றி.



## I. நிச்சய தாம்பூலம்

இச்சடங்கு பொதுவாக நம் இனத்தவர்கள் விமரிசையாகக் கொண்டாடுவது இல்லை. (காரணம் இவ்வைபவத்தை திருமண நாளில் 'டீகாவில்' விமரிசையாக நடத்துவதால்) இருந்தும் விருப்பத்துடன் சிலர் செய்வதால் இது நடத்தப் படும் வழியினை பார்ப்போம்.

மாப்பிள்ளை வீட்டார்–பெண் வீட்டார் இருவரும் ஒருவருக்கொருவர் எல்லா விஷயங்களிலும் திருப்தி அடைந்த பிறகு ஒரு நல்ல குறிப்பிட்ட சுபமுகூர்த்த நாளில், மாப்பிள்ளை வீட்டார் குடும்ப சமேதராய் சுமங்கலி ஸ்திரிகளுடன், பூ, பழம், தேங்காய், தாம்பூலம், கருப்பு இல்லாத புடவை, ரவிக்கை, விருப்பம் இருந்தால் ஏதேனும் ஒரு ஆபரணத்துடன் பெண் வீட்டு இல்லத்திற்கு சென்று, அவர்கள் வீட்டு பந்துக்கள் முன்னிலையில் புரோகிதரை முன் வைத்துக் கொண்டு வந்தவற்றை முன் வைத்து, இன்ன முகூர்த்தத்தில், இன்ன தேதியில் மணமகன் மற்றும் மணமகள் பெயர்களை எழுதிய நிச்சயதார்த்த பத்திரத்தை (மாதிரிபடிவத்தை கடைசி பக்கத்தில் பார்க்க) புரோகிதர் கொண்டு எழுதி இரு வீட்டாரின் பெரியவர்கள் முன்னிலையில் படித்து கையொப்பம் இட்டு, புரோகிதரின் மந்திர உபதேசத்துடன் அதனை தாம்பூலத் தட்டுடன் மாற்றிக் கொள்ள வேண்டியது. பிறகு பிள்ளை வீட்டார்

பெண் வீட்டாருக்குக், கொண்டு வந்தவற்றைத் தந்து மரியாதை செய்த பிறகு இரு சம்மந்திகளும் (மாமனார்கள்) மாலை, இனிப்பு, தாம்பூலம் மாற்றிக் கொண்டு பிறகு மணமகளை அமர்த்தி மணமகளுக்கு மடி அரிசி நிரப்பி, சர்க்கரை, தாம்பூலம் அனைவருக்கும் அளித்து, பெண் வீட்டார் சிறு போஜனம் அளித்து இந்த நிகழ்ச்சியை இனிதே முடிக்க வேண்டும்.

விவாகம் உத்திராயணம் வளர்பிறை காலத்தில் சுபயோக சுபதினத்தில் திருமண நாள் இடம் குறித்த பிறகு திருமணச் சடங்குகள் தங்கள் குல தர்மப்படி வரிசைக்கிரமாக ஆரம்பிக்க வேண்டும்.

## II. திருமணத்திற்கு முன் வீட்டில் நடக்கும் விசேஷங்கள்

### 1. முதலில் விநாயகர் பூஜை :

மற்றும் தங்கள் குல தெய்வ பூஜைகள், திருமண வைபவம் நன்கு சுபமாக நடைபெற வேண்டும் என்றும், மணமக்கள் சிறப்புடன் வாழ குலம் தழைக்கவும் வேண்டி எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுதல் நலம்.

### 2. வடம் போடல்:

உரல்–உலக்கை–அம்மிக்கல் இவைகளுக்குத் திலகம் இட்டு காப்பு கட்டுதல்; உளுந்து மாவுக்கு மஞ்சளால் ஜெனவு தாரன் செய்து பலகையின் மேல் சப்த பிடி மாவிட்டு (வத்தல்/பரி), மஞ்சள் குங்குமம் இட்டு, தேங்காய், பழம், தூப தீபம் கொண்டு பூஜை செய்ய வேண்டியது. இதனை இரு வீட்டாரும் தனித் தனியாக அவர்கள் இல்லத்தில் செய்தல் வேண்டும். லட்சுமி வாசமும் கடாக்ஷமும் உண்டாக வேண்டி இது செய்வதாக அய்தீகம். சக்திக்கு ஏற்றபடி கலந்து கொண்டவர்களுக்கு வெற்றிலை., பாக்கு, பழம் ஆகியவற்றை சுமங்கலி ஸ்திரிகளுக்கும், கன்னிகளுக்கும் கொடுத்து, முடித்தால் அவர்களுக்குப் பலகாரம் கொடுக்கலாம். இந்த வத்தலை (வடத்தை) (பரி) வெயிலில் உலர்ந்த பிறகு திருமணத்தன்று பயன்படுத்திக் கொள்ள வேண்டியது.

### 3. ஸிதேசிலாவா :

திருமண நாளுக்கு முன்பு, மாப்பிள்ளை வீட்டார் தங்கள் வீட்டில், உறவினர் முன்பு மாப்பிள்ளையை அமர வைத்து மாலை அணிவித்து நலங்கு இட்டு,அவர் முன் 7 சுமங்கலிகள் 7 முரத்தை மஞ்சள், குங்குமம் இட்டு, அதில் மஞ்சள் / கோதுமை / கடலை / நவதானியங்கள் போன்றவற்றை போட்டு பச்சொடனா (முரத்தை தட்டி ஆட்ட வேண்டும்) பிறகு வந்திருந்தவர்களுக்கு தாம்பூலம் அளித்து இனிப்பு வழங்கி கௌரவிக்க வேண்டும்.

இதே போல் பெண் வீட்டிலும், பெண்ணை அமர வைத்து 5 சுமங்கலிகள் முன் அமர்ந்து இந்த நிகழ்ச்சியை செய்ய வேண்டும். பெண் வீட்டார் 5 முரம் கொண்டு நிகழ்ச்சியை செய்ய வேண்டும்.

இது மணமக்களே செய்வதாக ஐதீகம்.

## 4. சுமங்கலி பூஜை (இரு வீட்டார் சடங்கு) :

மாங்கல்யம், (நிம்போலி), மாப்பிளை வீட்டில் மட்டும் மாங்கல்யப் புடவை, நகைகள், இருவீட்டார் பூரி, பெண் வீட்டார் பூரி 1 தேங்காய் அத்தேரி பூரி, லப்சி (கேசரி), தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, வேஷ்டி அங்கவஸ்திரம் இவைகளை வைத்து பூஜை செய்யவேண்டும் பூஜை அறையில் (கலச அறையில்) கிழக்கு பார்த்த சுவற்றில் 5 விரல்கள் கொண்டு உள்ளங்கை படும்படி (தப்தா) மஞ்சளால் சுவற்றில் பதிய வைக்க வேண்டும். (தப்தா 11 அல்லது 9 அல்லது 3 அவர்கள் குலப்படி) பிறகு சுவற்றுக்கு முன் கலசம் வைத்து அலங்கரித்து பூஜை செய்ய வேண்டும். இதற்குப் பிறகு வீட்டு குலப்படி பூஜைகள் செய்தல் நலம். மூக்கூத்தி–நத்து இவற்றை மஞ்சள் நாத்தில் வைத்து, மாங்கல்யம் தப்தா வைத்து பூரி, நிம்போலி லப்சி,அத்தோரி பூரி வைத்து தீபம் ஏற்றி பூஜை செய்த பிறகு திருமணச் சடங்கை தொடங்கவும்.

## திருமண மண்டபத்தில் நடக்கும் விசேஷங்கள்

### 1. டீகா லக்னப்பத்திரிகை வாசித்தல்

முதலில் பெண் வீட்டார் திருமண மண்டபத்திற்கு சென்று மாப்பிள்ளை வீட்டாரை திலகம் இட்டு, மாலை மரியாதை செய்து, ஆரத்தி எடுத்து வரவேற்க வேண்டும். திருமணத்தில் முதல் நிகழ்ச்சியாக தொடங்குவது டீகா (லக்ன நிகழ்ச்சி நிரல் பத்திரிகை வாசித்து திருமண வைபவத்தை தொடங்குதல் என்று பொருள்). டீகாவில் மணமகளின் சகோதரரை அலங்கரித்து மணமகனுக்கு மரியாதை செய்ய வேண்டியவற்றை தங்கள் சக்திக்குகேற்ப (ஏற்கனவே இரு வீட்டார் கலந்து முடிவு செய்தவற்றை) பூ, மாலை, பழத்தட்டு 5 வகைகள், வெற்றிலை, பாக்கு, சந்தனம், பன்னீர்,குங்குமம், இனிப்பு தட்டு, வாழைபழம், சக்திக்கு ஏற்ப மாப்பிள்ளைக்கு 'தட்டு' சந்தனக் கிண்ணம், சந்தன கட்டை, சிகப்புத் துணியில் சுற்றி, துணிமணிகள் 'இவற்றை புரோகிதர் ஆசி பெற்று (மைத்துனன்) ஸாலாவை' ஊர்வலமாக, மேள தாளத்துடன்,டீக்கா மாப்பிள்ளை, மணமகள் வீட்டுப் பந்தலுக்குச் சென்று அங்கு புரோகிதர் முன்னிலையில் மாப்பிள்ளையும், அவர் தாய், தந்தையர் குடும்ப சமேதராய் கிழக்கு பார்த்து அமர்த்தி, மணமகளின் சகோதரன் (ஸாலா) மற்றும் தாய், தந்தையருடன் குடும்ப சமேதராய் எதிர்ப்புறம் அமர்ந்து, விநாயகர் பூஜை செய்த பிறகு ஏற்கனவே எழுதி வைத்துள்ள லக்ன பத்திரிக்கை (திருமண ஒப்பந்தப் பத்திரம் திருமண நிகழ்ச்சிகள் விவரங்கள் அடங்கியது) (மாதிரி லக்கனப் பத்திரிக்கையை தனியாகக் காண்க) புரோகிதர், அனைவரும் கேட்கும் வண்ணம் வாசிக்க வைக்க வேண்டியது. மாப்பிள்ளைக்கு திலகமிட்டு (சிலர் ரூபாய் நாணயத்தை நெற்றியில் திலகமாக இடுவதும் உண்டு) மாலை மரியாதை

செய்து லக்னப் பத்திரிக்கையை, தாம்பூலத் தட்டுடன் மைத்துனன் மாப்பிள்ளையிடம் கொடுத்து அல்லது தங்கள் குலவழக்கப்படி இருவீட்டு சம்மந்திகள் லக்கினப்பத்திரிகையை/மாலை/இனிப்பு/தாம்பூலம் மாற்றிக் கொண்டு மாப்பிள்ளைக்கு மைத்துனர் மாலை மரியாதை செய்து இனிப்பு வழங்க வேண்டியது. அதேபோல் இரு குடும்பத் தலைவர்களும் மரியாதை ஏற்று கொள்ள வேண்டியது. கொண்டுவந்த பொருட்களை மாப்பிள்ளையிடம் கொடுத்த பிறகு மாப்பிள்ளை யானவர் மைத்துனருக்கு மரியாதை செய்தபிறகு பிள்ளை வீட்டார் வந்திருந்த பந்துக்களுக்கு இனிப்பும். பழமும் வெற்றிலை பாக்கு அளித்து கௌரவிக்க வேண்டியது. அதன் பிறகு மாப்பிள்ளைக்கும் மாப்பிள்ளைத் தோழனுக்கும் ஆரத்தி எடுத்து டீகா நிகழ்ச்சியை முடிக்க வேண்டும்.

### 2. சகாய்

மணமகளை மேடைக்கு அழைத்து வந்து அமர வைத்தது பெண் வீட்டார் குடும்ப சமேதராய் அமர்ந்து அவர்களுக்கு எதிரில் மாப்பிள்ளையின் சகோதரியை (நாத்தனார்) அமர வைத்து, குடும்ப சமேதராய் இருந்து, நாத்தனார் ஆனவர் மணமகளுக்கு திலகம் இட்டு துணிமணிகள் கொடுத்து மரியாதை செய்ய வேண்டியது. அதே போல் பெண் வீட்டார் மாப்பிள்ளையின் சகோதரிக்கு மணமகளின் மூலம் திலகம் இட்டு இனிப்புகள் வழங்கி கௌரவிக்க வேண்டியது. மாலைகள் மாற்றிக் கொண்ட பிறகு இரு வீட்டு சம்மந்திகள் (மாமியார்கள்) முறையே மரியாதையை ஏற்றுக் கொள்ள வேண்டியது. மணமகள் மற்றும் நாத்தனார்க்கு ஆர்த்தி எடுத்து நிகழ்ச்சியை முடித்து வைக்க வேண்டும்.

### 3. கம்பஸ்தான்

முதலில் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த 7 சுமங்கலிப் பெண்கள் கிணறு அல்லது குழாய் அருகில், மாப்பிள்ளையின் சகோதரியையும் அவர் கணவரையும் கொண்டு அதற்குரிய பூஜை அங்கு செய்து (சாணம், மண், கோதுமை, நெல் குத்தி அவைகளால் அலங்கரித்த கலசப்பானை) பானையில் நீர் நிரப்பி மாப்பிள்ளை வீட்டுப் பந்தலில் அதனை கொண்டு வருவதற்குள், புரோகிதரைக் கொண்டு சிறு குழி வெட்டி, கம்பஸ்தான் (மாமரத்திலான கொம்பு) நட்டு அதற்கு முன் சிறு மண் திட்டு ஏற்படுத்தி, அதில் நெல்,கோதுமையின் பசுமையான சிறு கதிர்களை (ஏற்கனவே பயிரிட்டு கொண்டு வந்ததை) வைத்து அலங்கரித்து அதன் மேல் நீர் நிரப்பிய பானையை அந்த மண் மேட்டின் மேல் வைத்து, அதன் மேல் பெரிய அகல் விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். புரோகிதர் மந்திரங்கள் கூறி கலசப் பானைக்கும் கம்பஸ்தானுக்கும், மாப்பிள்ளைக்கும் கங்கணம் கட்ட வேண்டும்.

பிறகு மேற்சொன்னது போல் மணமகள் வீட்டைச் சேர்ந்த 5 சுமங்கலிகளைக் கொண்டு மணப்பெண்ணின் சகோதரி அவர் கணவருடன் கிணறு அருகில் சென்று பூஜை செய்து, பானையில் நீர் நிரப்பி, பெண் வீட்டுப் பந்தலில் (மாப்பிள்ளை வீட்டுப் பந்தலில் செய்தது போல் அனைத்தும்) புரோகிதரைக் கொண்டு கம்பஸ்தான் நட்டு, பானை வைத்து அதன் மேல் விளக்கு ஏற்றி, கங்கனம் மணப் பெண்ணுக்கும், கம்பஸ்தானுக்கும் பானைகளுக்கும் கட்ட வேண்டியது.

### 3. நலங்கு



முதலில் மணவாளனுக்கு பெண்வீட்டில் இருந்து நலங்குப் பொருட்கள் வருதல் வேண்டும். அனுப்ப வேண்டிய சாமான், வெள்ளை வேஷ்டி, (இதன் மேல் மணப் பெண்ணின் உள்ளங்கையில் மஞ்சள் தடவிய அத்தோரி தப்தா கொடுக்க வேண்டும்) எண்ணெய், நலங்கு மாவு, மஞ்சள், குங்குமம், அரிசி, டவல், தலைக்கு துண்டுத் துணி ஆகியவை அனுப்புதல் வேண்டும். நலங்கு மாப்பிள்ளைக்கு முடிந்தவுடன் அதே தட்டில் வெள்ளைப் புடவையின் மேல் மாப்பிள்ளையின் உள்ளங் கையால் மஞ்சள் தடவி அத்தோரி தப்தா கொடுத்து மணமகள் அறைக்கு அனுப்பி மணமகளுக்கு நலங்கு வைக்க வேண்டும்.

## நலங்கு செய்யும் விதம்

நலங்கு இடும் சம்பிரதாயங்கள் தங்கள் குல தர்மப்படி செய்வது சாலச் சிறந்தது. இருப்பினும் கால நேரத்தைக் கணக்கில் கொண்டு பலர் சுருக்கமாக செய்வதை இங்கு குறிப்பிடுகிறோம். மணவாளனுக்குப் பெண் வீட்டில் இருந்து வந்த வேஷ்டி துண்டை அணியச் செய்து, கம்பஸ்தான் முன் அவர் கையில் அத்தோரி பூரியுடன், தேங்காய் கொடுத்து அமர வைக்க, முதல் நலங்கை புரோகிதரை கொண்டு கவுரி கம்பஸ்தானுக்கு நலங்கிட்ட பின் மாப்பிள்ளைக்கு இட வேண்டும். இதே போல் 7 கன்னி பெண்களும் (நல்ல எண்ணையையும்) 7சுமங்கலிப் பெண்களும் நல்ல எண்ணை, மஞ்சள் கொண்டு நலங்கிட வேண்டும். அது சமயம் மணவாளனின் தாய் தந்தையர் மணவாளனின் பின்னால் நிற்க வேண்டும். மணவாளனுக்கு நலங்கு இட்ட பின் ஸ்திரீகள் மணவாளனின் சிரசில் அட்சதை இட்டு, தங்கள் கையில் உள்ள மஞ்சளை அவர்கள் தாய் கட்டியுள்ள வெள்ளைப் புடவையில் துடைத்துக் கொள்ள வேண்டியது. நலங்கு இட்ட அனைவருக்கும் தாம்பூலம், தட்சிணை மாப்பிள்ளை வீட்டார் தர வேண்டியது. நலங்கு முடிந்தவுடன் மாப்பிள்ளைக்கு திலகம் இட்டு ஆரத்திப் பாட்டுப் பாடி ஆரத்தி எடுக்கவும். பின்பு திருஷ்டி சுத்தி மஞ்சள் நீரில் போடவும். மாப்பிள்ளையை எழச் செய்து நீரை அவர் முன்னால் தெளித்துக் கொண்டு அவரை மாப்பிள்ளையின் கலச அறைக்கு அழைத்துச் செல்ல வேண்டியது.

பிறகு மேற்கூறியபடியே மணப் பெண்ணுக்கும், 5 கன்னிபென்களும், 5 சுமங்கலிப் பெண்களும் நலங்கு வைத்து கடைசியாக தலையை சுத்தும் நாணயத்தை நாவிதனுக்குக் கொடுக்க வேண்டியது.

**குறிப்பு :**

1. நலங்கு இடும்பொழுது மற்றும் திருமாங்கல்யம் கட்டுபொழுதும் விதவைகள் பச்சைப் பந்தலில் நிற்கவும் செல்லவும் கூடாது என்பது சாஸ்திரம்.
2. நலங்கு இடுவது தம்பதிகளை சுத்தப் படுத்தி ஆசிர்வதிக்கும்படி செய்யும் சடங்கு ஆகும்.
3. தம்பதிகளுக்கு யாதொரு பீடையும், இடையூறும் வராமல் விக்கினமின்றி திருமணம் நடந்து, மாங்கல்ய ஸ்திரீகளின் சிரசில் எப்பொழுதும் லட்சுமி வாசம் இருக்க வேண்டும் என்று வேண்டி செய்யும் பாவனை ஆகும் என்பது மேலோர் கூற்று.

### 4. சவாப் பூஜை (கௌரி பூஜை)



வேண்டிய பொருட்கள் 14 ரவிக்கை, 14 கண்ணாடி, 14 சீப்பு, 24 பச்சை வளையல்கள், 14 ரவிக்கைத் துண்டு, இலையுடன் பூரி, சர்க்கரை, லப்ஸி, பழம், தேங்காய், 14 குங்குமச்சிமிழ் வைத்து பூஜை செய்ய வேண்டும்.

மனையில் மாப்பிள்ளையை அமர வைத்து தொன்னை ஒன்றை அவர் கையில் கொடுத்து மாங்கல்ய ஸ்திரீகள், பூரி 3 துண்டு, லப்ஸி, பழத் துண்டுகள் மணவாளன் தொன்னையில் போட வேண்டியது. இதனைக் கையில் தீண்டாமல் 3 கவளத்திற்குக் குறையாமல் கையால் வாயிற்றோனே அதனை எடுத்து சாப்பிட வேண்டும். இது முடிந்தவுடன் மாங்கல்ய ஸ்திரீகளுக்கு மடி நிரப்பி மாப்பிள்ளை வீட்டார் 8 – பெண்வீட்டார் 6 பேருக்கு, ரவிக்கை தாம்பூலம் கொடுத்து உபச்சாரம் செய்ய வேண்டும். (மாங்கல்ய ஸ்திரீகள் விரதம் இருந்து இவ்வாறு செய்வதால், பத்தினி தர்மம் பகிர்ந்து கொடுத்ததாகவும், தம்பந்திகள் வெகுகாலம் சுகப்பட வாழ கௌரி மாதா ஆசிர்வதிப்பதாக ஐதீகம்).

### 5. சீகட்டு

மாதா, பிதா முன் மாப்பிள்ளையை அமரச் செய்து, மிகவும் வேண்டிய உறவினர்கள் மாப்பிள்ளையின் தாய் தந்தையருக்கு இனிப்பு வழங்கி திலகம் இட்டு, சோமன் ஜோடா (புடவை, ரவிக்கை, வேஷ்டி, துண்டு) மரியாதை செய்தல் வேண்டும். பிறகு மாப்பிள்ளை மற்றும் தாய் தந்தையர் குளித்து மாப்பிள்ளைக்கு புதிய வேஷ்டி உடுக்க வைத்து, (மாப்பிள்ளை இது வரை உபவாசம் இருந்ததால் பூரி சர்க்கரை பால் மாத்திரம் கொடுத்து) ஜாமா உடுக்கச் செய்து, சிங்காரித்து அவரை தயார்படுத்த வேண்டும்.

இதே போல் பெண் வீட்டாரும் மணமகளின் தாய் தந்தையாருக்கு மரியாதை செய்த பிறகு அவர்களும் குளித்து, மாப்பிளை ஊர்வலம் சென்று வருவதற்கு முன் மணமகள் வீட்டார் மணவறையை சுத்தப்படுத்தி வைக்க வேண்டும்.

### 6. கிரீடம் (மொஹர்) கட்டுவது

(கிரீடத்தை மாப்பிள்ளையின் வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு முன் அதனை புரோகிதரைக் கொண்டு அருகில் உள்ள கோவிலில் பூஜை செய்து, வாத்தியம் முழங்கக் கொண்டு வந்து தயாராக இருத்தல் வேண்டும்).

சிங்காரித்து உள்ள மாப்பிள்ளையை உட்கார வைத்து, நாதஸ்வர இசையுடன் வயதில் மூத்தோர் 5 பேர்களைக் கொண்டு பூ பத்தி, மாலை அணிவித்து, கிரீடத்தை எடுத்து மணவாளனின் தலையில் வைத்து பகடி, சிகப்புத் துணியைக் கொண்டு கட்ட வேண்டியது. இப்போது, மற்றும் ஒரு சிறு சிகப்புத் துணியை கிரீடத்திற்கு மேல் நான்கு மூலையில் மாங்கல்ய ஸ்திரிகளை நிறுத்திப் பிடிக்க வைத்து, அதில் அத்தோரி பூரி, அப்பளம், வத்தல் ஆகியவை வைத்து அந்த நான்கு ஸ்திரிகள் நூலை எடுத்துச் சுற்றி அதனைத் திரித்து, அதில் மஞ்சள் கொம்பு சுற்றி மாப்பிள்ளையின் கையில் அத்தான் அல்லது மைத்துனன் கங்கணம் கட்ட வேண்டியது. அத்தோரி பூரிக்கு சுற்றியிருந்த நூல் தங்கள் குல தெய்வ ஆவனமடைந்த நூலாவதால் எவ்வித இடஞ்சலும் இல்லாமல் மாப்பிள்ளை வெளியில் பராத் சென்று வரக் கட்டுவதாகும். துணியை மற்றும் பரியை (பந்தலில்) அல்லது அவரவர் குல வழக்கப்படி ஸாங்கிதம் செய்து கொள்ள வேண்டியது.

#### (அ) மாப்பிள்ளைக்கு காஜல் செடாவ (மையிடல்)

மாப்பிள்ளையின் தமக்கை/தங்கையைக் கொண்டு மாப்பிள்ளையின் கண்களுக்கு மை இடவும். தாம்பூலம் தட்சணை அவருக்குக் கொடுத்து மாப்பிள்ளைக்கு ஆரத்தி எடுக்கவும்.

#### (ஆ) மாதா (தாய்) பந்தோபஸ்து

இது நாள் வரை தாய் ஆதரவில் இருந்த பிள்ளை அவரை விட்டுப் பிரியப் போவதால், ஓர் குடத்தில் தண்ணீர் நிரப்பி வெளியில் வைத்து, தென்னை ஈர்க்கு அல்லது மூங்கிற் குச்சி பூவுடன் 7 தயார் செய்து, அன்னையை குடத்திற்கு முன் அமர வைத்து மாப்பிள்ளை அன்னையை 7 தரம் தண்ணீர் குடத்துடன் சேர்த்து சுற்றி வலம் வர வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் ஒவ்வொரு குச்சியாக குடத்தில் இட வேண்டும். இதன் பாவனை என்னவென்றால் தாய் தனியானதால் மணப் பெண்ணுடன் திரும்பி தாயிடம் வரும்வரை சப்த ரிஷிகள் ஆதரவோடு அவர் வசம்தாம் இருக்க வேண்டும் என்று பாவனையாகும். ஜலம் ஈர்க்கு ரிஷகளுக்குச் சமமாகும்.

**(இ) கடைசியாக தாய் தன் மகனுக்குப் பால் கொடுத்தல் (நிச்சர்பால்)**

கடைசி சுற்று சுற்றியபிறகு தன் முந்தானையால் தன் மகனின் முகத்தை மறைத்து பிறர் பாரா வண்ணம் அவரை பால் குடிக்கச் செய்ய வேண்டும். (சிலர் பாலைக் குடித்து கொஞ்சம் வெளியில் உமிழ்வதும் உண்டு) இப்போது மகன், தன் தாயிடம் உனக்கு பணிவிடை செய்ய மருமகளைக் கொண்டு வருகிறேன் என்று கூறி பராத் ஊர்வலம் செல்ல, அறையை விட்டு வெளியில் வரவேண்டும்.

**7. பராத் ஊர்வலம்**



பராத் குதிரையில் ஏறி சவாரி வரும் பொழுது மணவாளனின் இடுப்பில் சிறு பிச்சுவாயை (கத்தி) சிகப்புத் துணியில் சுற்றி இடுப்பில் சொருகி ஜாக்கிரதையாக இருக்கச் செய்யவேண்டும். மேள தாளங்கள், பேண்டு பாத்தியம் முழங்க சூரியன் அஸ்தமித்த பிறகு கிளம்பி குறித்த நேரத்திற்குள் திருமண கூடத்திற்கு அருகில் சுற்றம் சூழ கேளிக்கையுடன் வந்தடைய வேண்டும்.

**8. புலாவான் (மாப்பிள்ளை அழைப்பு)**

ஊர்வலம் பந்தலுக்குக் கூப்பிடு தூரம் வந்தவுடன் மாப்பிள்ளை வீட்டார், 'தூலா ஸாப் கரீப்மே ஹை' (மணவாளன் அருகில் வந்து இருக்கிறார்) என்று பெண் வீட்டாருக்குச் செய்தியைக் கொடுக்க வேண்டும். இச்செய்தி கிடைத்தவுடன் பெண் வீட்டார் பந்தலுக்கு சற்று தூரம் ஊர்வலத்திற்கு எதிரில் வந்து உபசாரங்கள் செய்து, வீட்டுக்கு அழைப்பு கொடுக்க இரு வீட்டாரும் "ஆவ்–ஆவ்–ஆவ்" (வருக–வருக–வருக) என்று அழைப்புக் கொடுத்து ஒருவருக்கொருவர் அருகில் வந்து சம்மந்தி மாலைகளை மாற்றிக் கொண்டு ஆலிங்கனம் செய்து கொண்டு, மாப்பிள்ளையை குதிரையில் இருந்து இரக்கி, திருமணச் சத்திரத்துக்கு அருகில் அழைத்து வரவேண்டும்.

**டீக்கா திலக் தாரன் (கணையாழி–மோதிரம் போடுவது)**

பெண்வீட்டின் பந்தலின் வாசலுக்கு மாப்பிள்ளை வந்ததும், அவருக்கு ஆசனம் அளித்து, உபசாரம் செய்து, கிழக்கு முகமாக அமர வைத்து, மாமனார் அல்லது மைத்துனர் மாப்பிள்ளையின் பாதங்களுக்கு நீர் விட்டு அலம்பி, திலகம் இட்டு, ஆரத்தி எடுத்து, இனிப்பு வழங்கி, சக்திக்கு ஏற்ற படி கணையாழி என்ற மோதிரம் இட்டு, தல்வார் (கத்தி)–ஜோடி கால் (வேஷ்டி) போட வேண்டியது. அதே போல் மாப்பிள்ளையும் மாமானாருக்கோ அல்லது மைத்துனருக்கோ இனிப்பு வழங்கி, திலகம் இட்டு, ஜோடி கால் கொடுக்க வேண்டியது. (சக்திக் கேற்ப இது மகிழ்ச்சியாக நடத்த வேண்டும்).

ஜனவாசி மற்றும் ஜெனவுபைரன் (பூநூல் போடுதல்)

புரோகிதரை முன் வைத்து பெண்ணின் தமையன் அல்லது தம்பியைக் கொண்டு மாப்பிள்ளைக்கு பூநூல், தாம்பூலம், ஜோடிஸால் (வஸ்திரம்) கொடுத்து புரோகிதர் உபதேசம் செய்ய பூநூலை மாப்பிள்ளை அணிய வேண்டியது. பிறகு பெண்ணின் தம்பிக்கு மாப்பிள்ளை வீட்டார் மரியாதை செய்ய வேண்டியது.

இதுவரை மாப்பிள்ளை பிரம்மச்சாரி நீங்கிய காலம் முதல் ஒத்தைப் பூணூல் அணிந்திருந்தார். இன்று முதல் சம்சாரவாசி ஆகப்போவதை முன்னிட்டு பூநூல் ஒத்தைப் பூணூல் மூன்று இணையுடன்–இன்னும் மூன்றினைச் சேர்த்து அணிய வேண்டும்.

## 9. கலஸ்தாசன் மண்டுவாமாவன் (மணவாளன் திருமண மண்டபத்திற்குள் செல்லுதல்)

இப்பொழுது திருமண வாசலுக்கு வெளியில் மணவாளனை நிறுத்தியும் மணப்பெண்ணை உள்வாசலில் நிறுத்தி, இடையில் பர்தா (துணி திரை) பிடித்துக் கொள்ள வேண்டும். இச்சமயம் பெண் அருகில் உள்ள மாங்கல்ய ஸ்திரீகளும் கன்னிகைகளும் மணப்பெண்ணுடன் சேர்ந்து மாப்பிள்ளை மற்றும் அவர் பந்துக்கள் நோக்கி குல வழக்கப்படி அரிசி அல்லது நெல்பொரியை பொழிதல் வேண்டும். மாப்பிள்ளை அதனை விசிரியால் தடுத்து, அதே நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் மாப்பிள்ளையுடன் மணப்பெண்ணின் மீதும் அவர்கள் பந்துக்கள் மீதும் வெற்றிலையுடன் நெல் பொரியை அல்லது அரிசி உடன் தங்கள் குல வழக்கப்படி வீச வேண்டும். இந்த நிகழ்ச்சி முடிந்து மணப் பெண்ணை அழைத்துச் சென்ற பிறகு, மணப் பெண்ணின் தங்கை கலச தீபத்தை காண்பிக்க, மாப்பிள்ளை அதை தரிசித்து திருமண மண்டப வாசலுக்கு உள்ளே மேளதாளம் முழங்க நுழைய வேண்டியது. மேளதாளத்துடன் அப்பொழுது தட்சணை அவர்களுக்கு மாப்பிள்ளை கொடுக்க வேண்டும்.

## 10. பெண்ணுக்கு மோரினி கூட்டுதல்

மஞ்சள் துப்பட்டாவை மாப்பிள்ளையின் சகோதரர் (ஜேட்) என்ற உறவினர் 'சத்தர் மணப் பெண்ணுக்கு அணிவித்து பின் மோர் கட்ட வேண்டும்.

## 11. க்ஷடாவாசமான்களை பிள்ளை வீட்டார் மணப்பெண்ணுக்கு அளித்தல் :

மணப்பெண்ணை விவாக மண்டபத்தில் அமர வைத்து அவர்கள் தாய் தந்தையரை முன்னிருக்கச் செய்து மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த க்ஷடாவாசமான்களை தங்கள் குல வழக்கப்படி யாவையும் வாழ்த்தி மணமகளிடம் கொடுக்கச் செய்யவும்.

**பொதுவாக கூடாவாசாமான்கள் :**

ஸூட்கேஸில் : பட்டுப் புடவை (மாங்கல்யப் புடவை) ரவிக்கை, நகைகள், பச்சை வளையல் டஜன், சர்ரா, புன்னா, சுவாக்பூடா, செந்தூர், குங்குமம், வாசனை எண்ணெய், நக பாலிஷ், சென்ட், செந்தூர்போட 2 மரக் குங்குமச் சிமிழ், சீப்பு, கண்ணாடி, சிறு பையில் மஞ்சள், பாக்கு, இலவங்கம், ஜாதிக்காய், ஏலரிசி, கஜூர்காய், சிறிது நாணயம்.

சுவாக்பூடா என்பது மணப்பெண்ணிற்கு முதன் முதல் கொடுக்கப்படும் சீராகும். இது இல்லாமல் திருமணம் கிடையாது என்று பேசுவோரும் உண்டு.

### 12. குப்த்தான்/கன்னிகாதானம்



மணப்பெண்ணையும்–மணமகனையும் திருமண மண்டபத்தில் அமர்த்தி, அவர்களுக்கு இடையில் பர்தா பிடித்து, ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருக்கச் செய்து, மாப்பிள்ளையின் இரண்டு கரங்களை ஒன்றாகப் பிடிக்கச் செய்து அதன் மேல் பெண்ணின் இரண்டு கரங்களையும் பதிய வைத்து, இணைத்து, முதலில் பிச்சுவா, மூக்குத்தி போன்ற நகைகள், த்க்ஷிணை போட்டு, (எள் போட்டு) மணவாரியை தாய் தந்தையர், புரோகிதர் மந்திரம் சொல்ல, ஜலம் இட பெண்ணை தாரை தரல் வேண்டும். (இது தங்கள் குல வழக்கப்படி மாற்றியும் செய்து கொள்ளலாம்) அவர்களைத் தொடர்ந்து கன்னிகைக்கு மிகவும் வேண்டியவர்கள் அனைவரும் மணப்பெண்னை மணமகனுக்கு தானம் செய்தல் வேண்டும். (இருவர் பாதங்களைத் தட்டில் வைத்து கால்களை நீர் விட்டு திலகம் இடுவதும் உண்டு).

### 13. பௌரி (திருமணப் பந்தலை மணமக்கள் சுற்றுதல்)



இப்பொழுது பர்தாவை விலக்கி ஓமம் வளர்த்து பெண் முன்னே செல்ல மாப்பிள்ளை பின் செல்ல கைகோர்த்து 6 முறை பௌரி பந்தலை சுற்றி வரவேண்டும். இத்தருணத்தில் பெண் வீட்டார் பந்தலைச் சுற்றி இருக்க வேண்டும். ஒவ்வொரு சுற்றும் ஓமக் குண்டத்தின் முன்வரும்பொழுது, மணமகளின் சகோதரர் (சாலா) மாப்பிள்ளையின் கைமேல் பெண்ணின் கையை இருக்க வைத்து, தன் கையால் நெல் பொரி போட அது ஓமக் குண்டத்தில் விழ வேண்டும். அதற்கு ஏற்றபடி புரோகிதர் மந்திரங்களைச் சொல்ல வேண்டும். 6வது பௌரி முடிந்தவுடன் மாப்பிள்ளை மட்டும் மணவறையில் அமர வைத்து விட்டு, மணப்பெண்ணை தன் அறைக்கு அழைத்துச் சென்று மாப்பிள்ளை வீட்டார் கொடுத்த சடாவ் சாமான்கள் உள்ள பெட்டியில் இருந்து மாங்கல்யப் புடவை, ரவிக்கை, நகைகள் (கன்னிகாதானம் செய்த நகைகள் உட்பட) வளையல்கள், குங்குமம், வாசனைத்

திரவியங்கள் பயன்படுத்தி காலில் பிச்சுவா போட்டு, மடியில் சுவாக்பூடாவை வைத்துக் கட்டி, மணப் பெண்ணை பந்தலுக்கு அழைத்து வருதல் வேண்டும். அதற்குள் மாங்கல்யத்தை தாம்பாளத்தில் தேங்காய், அட்சதையுடன் வைத்து வந்திருக்கும் சுற்றத்தார் அனைவரிடமும் காண்பித்து, ஆசி பெற்று அட்சதை அவர்களிடம் கொடுத்து, மாங்கல்யத்தை புரோகிதர் மணப்பந்தலில் அதற்குண்டான மந்திரங்கள் சொல்லி, தயாராய் வைத்து இருத்தல் வேண்டும்.

### 14. நிம்போலிதார ன் கட்டுவது (மாங்கல்யம்/தாலி கட்டுவது)



மாப்பிள்ளையின் இடது பக்கம் பெண்ணை அமர வைத்து மணவாளியின் பர்தாவை மணவாளனின் துணியுடன் முடி போட்டபிறகு (புரோகிதர் கூறியுள்ளபடி) நல்ல நேரம் குறித்துள்ளபடி வேத கோஷம் முழங்க, வாத்திய கோஷம் முழங்க, நாதஸ்வர இசை முழங்க, தங்கள் குலப்படி மணவாளன்–மணவாளியின் கழுத்தில் முதலில் லச்சா கட்டி, பிறகு காலிபோத் அடங்கிய மாங்கல்ய கயிற்றை, தீர்க்க சுமங்கலிகள் உதவியுடன், இஷ்ட தெய்வத்தை பயபக்தியுடன் வேண்டிக் கொண்டு கட்ட வேண்டியது. அச்சமயம் திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் அட்சதை மற்றும் பூக்களை மணமக்களின் மீது தூவி ஆசிர்வதிக்க வேண்டியது.

**கடைசி பௌரி (7)**

மாங்கல்ய தாரணம் நிகழ்ச்சி முடிந்த பிறகு மாப்பிள்ளை முன் செல்ல மணப் பெண் பின் செல்ல மணமகளின் இரு சுண்டு விரல்களைப் பிடித்துக் கொண்டு இப்பொழுது மாப்பிள்ளை வீட்டார் பந்தலைச் சுற்றியிருக்க மணமக்கள் சுற்றி வந்து ஓமக் குண்டத்தில் மைத்துனன் உதவியுடன் புரோகிதர் மந்திரம் சொல்ல, நெல் பொரியை கடைசியாக போட வேண்டும். (இது தங்கள் குல வழக்கப் படி மாற்றியும் செய்து கொள்ளலாம்). இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் குறித்த நேரத்தில் (நாழிகையில்) செய்வது உத்தமம். அருந்ததி சாட்சியை இருவரும் ஏற்று மாப்பிள்ளைக்கு இடது பக்கம் பெண் உட்கார வேண்டும்.

### 15. ஆசிர்வாதம் மற்றும் உபசரணைகள்

இப்பொழுது மோதிரம் போட வேண்டும். செந்தூரம் என்ற பொட்டை மணவாளன், மணவாளிக்கு தங்கள் குல வழக்கப் படி இட வேண்டும். மாப்பிள்ளை மற்றும் மணப்பெண்ணை, பெண்ணின் சகோதரி செந்தூரம் இட்டு, மணவாளன் காலுக்குத் திலகம், ஆடைகள் அளித்து மரியாதை செலுத்திய பிறகு வந்திருந்தவர்கள் மணமக்களை ஆசிர்வதிக்க வேண்டும். பந்தலின் கடைசியாக புரோகிதருக்கு உரிய தட்சணைகள் கொடுத்து அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று (தங்கள் குடும்பங்களில் உள்ள மூத்தவர்களுக்கும் இதுபோல் செய்து அவர்களின் ஆசியும் பெற்று) நிகழ்ச்சிகளை இனிதே முடிக்க வேண்டும்.

### 16. முதலில் மாப்பிள்ளை பெண் வீட்டுக்குச் செல்லுதல்

பெண்விட்டு அறையில் இருவரும், கலசத்திற்கு பூஜை செய்து, தீபத்தை இறக்கி கீழே வைத்து, கலச நீரை மணமக்கள் மீது தெளித்து கங்கணங்களை அவிழ்த்து விட்டு அவர்களை சிறிது ஓய்வு எடுக்க வைத்து போஜனம் இட வேண்டும்.

### 17. பிதாயி (மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண் செல்லுதல்)

சீர்கள் கொடுத்து முடிந்த பிறகு மாப்பிள்ளை அறைக்கு மணமக்கள் சென்று, கலசத்திற்கு பூஜை செய்து, தீபம் இறக்கி, கலச நீரைத் தெளித்து மோர் மற்றும் மோரினியை கழற்றி வைக்க வேண்டியது.

18. மாப்பிள்ளை முதலில் பெண் வீட்டுக்குச் சென்று அத்தோரி பூஜை செய்ய வேண்டும்.

19. மணமக்கள் இருவரும் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று அத்தோரி பூஜை செய்தல் வேண்டும்.

20. மஞ்சள் நீராடல், தோட்டத்தில் (பகிச்சா பூஜை) இருந்தால் அதனை செய்தல் வேண்டும்.

21. மாப்பிள்ளை வீட்டில் மணப்பெண் வீட்டாருக்கு விருந்தளித்தல்.

22. பாகத் பாஷா பெண் வீட்டில் (சிலர் மாப்பிள்ளை வீட்டிலும் விருந்துக்குப் பிறகு செய்வது உண்டு) புரோகிதரைக் கொண்டு நாளும் நாழிகையும் குறித்து குலப்படி முறைப்படி முதல் இரவு சாங்கியத்தை செய்து முடித்தல் சுபம்.

தம்பதிகள் எல்லா இன்பமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

## மற்ற நிகழ்ச்சிகள்

திருமணம் முடிந்து வரும் முதல் (1) சங்கராந்தி (2) ஹோலி (3) ரக்ஷ்ஷா பந்தன் (ராக்கி) (4) தீபாவளி (5) முதல் குழந்தை பிறக்க அதன் விழாக்களை பெண் வீட்டார் அவரவர் சக்திக்கேற்ப மகிழ்ச்சியுடன் செய்தல் வேண்டும். பிள்ளை வீட்டாரும் அதனை ஏற்று அவர்களும் மகிழ்ச்சியுற்று இளம் தம்பத்தியர் நல் மக்களைப் பெற்று, எல்லாம் பெற்று, இன்ப துன்பங்கள் யாவும் – எல்லாம் வல்ல இறைவன் தீர்ப்பு என ஏற்று, குல தர்மத்தை முடிந்த அளவிற்கு வழுவாமல் ஏற்று, நம்மில் பெரியவர்களிடம் சீரிய ஆலோசனைகள் தேவைப்படும் பொழுது பெற்று சீரும் சிறப்புடன் வாழ நம்மில் பெரியவராகிய இறைவனை வேண்டுவோமாக.

சுபம்



ஓம்
சுபமஸ்து
ஸ்ரீ ராமஜெயம்
முருகர் துணை

# டீகா முகூர்த்தப் பத்திரிகை

நிகழும்................................வருஷம்.......................மாதம்............................ தேதிக்கு சரியாக ஆங்கிலம் (.........................) ............................... கிழமை வளர்பிறை/தேய்பிறை ......................... திதி ........................................ நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் மாலை/இரவு ............................. மணிக்குமேல் .................................... மணிக்குள்ளாக ............................................ லக்கினத்தில்

ஊர்

பிள்ளைவீட்டுகோத்திரம்

ஸ்ரீமான்.................................. சிங் அவர்கள் நப்திரன்

ஸ்ரீமான்............................. சிங் அவர்களின் பௌத்திரன்

ஸ்ரீமான்............................... சிங்ஜி அவர்களின் குமாரன்

திருநிறைச்செல்வம்

.............................................................. சிங்ஜி

என்கிற வரனுக்கும்

ஊர்

பெண்விட்டு கோத்திரம்

ஸ்ரீமான்................................ சிங் அவர்கள் நப்திரி

ஸ்ரீமான்............................சிங்ஜி அவர்களின் பௌத்திரி

ஸ்ரீமான்............................ சிங்ஜி அவர்களின் குமாரத்தி

திருநிறைச்வெல்வி

.............................................................. பாய்

என்கிற கண்ணிகைக்கும்

விவாஹ சுப முகூர்த்தம் (பௌரி) செய்வதாய் பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் க்ஷ சுபமுகூர்த்தம் ........................................................................................ கல்யாண திருமண மண்டபத்தில் நடக்கிறபடியால் தாங்கள் குடும்ப சமேதராய் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள

(ஒப்பம்)......................................................
பெண் வீட்டார் கையெழுத்து விலாசம்
சாட்சிகள்

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள

(ஒப்பம்)......................................................
பிள்ளை வீட்டார் கையெழுத்து விலாசம்
சாட்சிகள்

## நிகழ்ச்சி நிரல்

டீகா............................................................... கிழமை............................................................................ மணி

கம்பஸ்தான்–மாயன்மண்டுவா

தேல்சடாவ்–ஹல்தி கௌரிபூஜா

.பராத்

டீகா............................................................... கிழமை............................................................................ மணி

விவாஹ சுப முகூர்த்தம் (பௌரி)

........................................... கிழமை ......................................... மணி ............................................. லக்கினம்

சுபம்

நிகழும்........................ வருடம் ..................... மாதம் ............................. தேதி

(...........................) .......................................கிழமை ....................................... பக்ஷம்

.................................. திதியும் ........................................ நட்சத்திரமும் ...................................

யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று .................. மணிக்கு மேல் ..................

மணிக்குள் ............................... லக்னத்தில் .................................................. மாவட்டம்

.................................................... நகரில் இருக்கும் ............................................... கோத்திரம்

.......................... குலம் ஸ்ரீ ............................................................................. பௌத்திரனும்

ஸ்ரீ.......................................................................................................... குமாரனுமான

திருநிறைச்செல்வன்.................................................................................. என்கிற

க்ஷத்திரிய வரனுக்கு

...................................................................... மாவட்டம் ............................................... நகரில்

இருக்கும் ................................................... கோத்திரம் ................................................. கலம்

ஸ்ரீ ................................................................................................................ பௌத்திரியும்

ஸ்ரீ ............................................................................................................ குமாரத்தியுமான

திருநிறைச்செல்வி .................................................................................. என்கிற க்ஷத்திரிய

கன்னிகையை பாணிக்கிரஹணம் செய்து கொடுப்பதாக பெரியோர்களால்

நிச்சயிக்கப்பட்டு .................................................................................................(இடம்)

நடைபெரும் இத்திருமணத்திற்கு வந்திருக்கின்ற அனைவருக்கும் அநேக நமஸ்காரம்.

மணமகனுக்கு நலுங்கு – 6 மணமகளுக்கு நலுங்கு – 7

இத்துடன் வரலான ரூபாய் ஒன்று பாவ்லா ஒன்று ஜாபரி ஒன்று வர பார்த்துக்கொள்ளவும்.

பார்க்கன்னியா சிரஞ்சீவி – சுபமஸ்து

**மணமகன் வீட்டார்**

1
2
3
4
5

**மணமகள் வீட்டார்**

1
2
3
4
5